# கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் /செயல் அலுவலர் அவர்களின்

# செயல்முறைகள்

**முன்னிலை:- திருமதி.ஜெகதீஸ்வரி சுந்தரேசன்., DME**

**ந .க எண்.115/2023-24** **நாள் - 01.02.2024**

பொருள் : **மனை உட்பிரிவு - அனுமதி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் கெருகம்பாக்கம் ஊராட்சி ச.எண்கள். 253/4 , 350 & 351/2-ல் அடங்கிய 7205 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு அனுமதி கோரியது கட்டணங்கள் செலுத்த கோருதல் தொடர்பாக.**

பார்வை :

1. திரு /திருமதி. Thiru.S.Peter & Tmt. Josephin Rosy
   அவர்களின் விண்ண ப்ப நாள் 01.12.2023
2. அரசாணை M.S.No 190, H & UD., Dept, நாள் - 02.09.2008.
3. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
   கடித எண் ஆர் .டி 5039/2008-D நாள் -23.06.2009
4. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
   கடித எண் ஆர் .டி. 6398/2009 - நாள் 23.06.2009.
5. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
   கடித எண் ஆர் .டி 1563/2009 நாள் -05.02.2010.
6. மனுதாரர் திரு /திருமதி.Thiru.S.Peter & Tmt. Josephin Rosy
   சென்னை - 600083.

ஆணை :

பார்வையில் கட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு சுற்றியுள்ள மனைகள் சாலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு ஒதுக்கீட்டின் கீழ்கண்ட மனைப்பிரிவு மற்றும் மனை பிரிவு விதிகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் அளிக்கப்படுகிறது

## <u>நிபந்தனைகள்</u>

1.மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் , சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிபந்தனைகளின் படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட்ட வேண்டும்.

2. மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்காக இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

3. தெருமுனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி திருப்பதோடு அமைக்கப்பட வேண்டும்

4. அங்கீகரிப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் குடியிருப்பு அல்லாத குடியுருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்த கூடாது

5. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.

6. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் ஏற்படுத்தக்கூடாது.

7. மனையின் சொந்தக்கார்கள் மேற்படி வீடுகட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தபட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரி, மற்றும் தலைவர் தரப்பாக்கம் ஊராட்சி அவர்களிடம் ஒப்பந்தம் செய்துக்கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத் திட்டங்கள் விற்பனைப்பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

8.அங்கிகரிக்கப்பட்டமனைப்பிரிவுவரைபடம்இத்துடனஇணைக்கப்பட்டுள்ளது.

9. இந்த மனைப்பிரிவில் உரிய சாலை வசதி, உரிமையாளர் செய்து தர வேண்டும்.

10. ஒப்புதல் அளிக்கப்படும் இந்த வரைபட அனுமதிக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழும வரைபடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் தவறாமல் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

11. வரைபடத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

12. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெரு விளக்கு மின் கம்பங்கள் நடப்பட வேண்டும்.

இணைப்பு :
i) மனை உட் பிரிவின் வரைபடம்

S. Jayadevi

தலைவர் / நிர்வாக அலுவலர்
கெருகம்பாக்கம் முதல்நிலை ஊராட்சி
சென்னை - 600 122.

தலைவர்/ செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி